Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JANUARY 02, 2025

வியாழக்கிழமை, 02 ஜனவரி 2025 | ஒளி: 10 கதிர்: 128 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ FREE

பொது மக்களின் வினைத்திறனான பங்களிப்புடன் மாத்திரமே

# “வெற்றியடைய முடியும்”

## ‘தூய்மையான இலங்கை’ திட்டத்தை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி உரை



பொது மக்களின் வினைத்திறனான பங்களிப்புடன் மாத்திரமே தூய்மையான இலங்கை வேலைத்திட்டம் வெற்றியடைய முடியும் என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து “தூய்மையான இலங்கை” வேலைத்திட்டம் 2025 ஜனவரி 1ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிபிட்டார்.

சகல அரச நிறுவனங்களிலும் “க்ளீன் ஶ்ரீலங்கா” (தூய்மையான இலங்கை) தேசிய வேலைத்திட்டத்துடன் உத்தியோகபூர்வ செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. பிரதான வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி,

2024 முடிந்து 2025க்குள் அடியெடுத்து வைக்கும் போது, அது ஒரு புதிய ஆண்டின் தொடக்கம் மற்றும் ஒரு புதிய ஆண்டின் விடியலைக் குறிக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். ஆனால் பல தசாப்தங்களாக எமது நாட்டில் இவ்வாறான வருடங்கள் இருந்தும் நல்ல விடயங்களுக்காக எம்மை புதுப்பித்துக் கொள்வதில் நாம் வெற்றி பெற்றுள்ளோமா என்ற கேள்வியை நாம் எதிர்நோக்குகின்றோம்.

வருடா வருடம், நல்ல விடயங்களுக்காகப் புதுப்பித்துக் கொண்டு முன்னேறிச் சென்றோமா அல்லது கெட்ட விடயங்களுக்காகப் புதுப்பித்துக்கொண்டு கடந்த காலத்திற்குச் சென்றோமா? என்ற கேள்வியை நாம் எதிர்கொண்டுள்ளோம். எனவே, இந்தப் புத்தாண்டில் நமது நாட்டை மாற்றியமைக்க உறுதியான உறுதியுடன் இருக்கிறோம்.

தொடர்ச்சி P2



## “பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டிய நிலை ஏற்படும்”

எரிபொருள் விலை திருத்தம் தொடர்பான அரசாங்கத்தின் தீர்மானங்களினால் பஸ் கட்டணத்தைக் குறைப்பது மக்களின் தொலைதூர கனவாக மாறியுள்ளதாக லங்கா தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## தொல்லியல் துறையினருக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம்

அ.அச்சுதன்

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட விவசாயிகள், தொல்லியல் துறையினருக்கு எதிரான கண்டன ஆர்ப்பாட்டம் குச்சவெளி பழைய பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக புதன்கிழமை (01) இடம்பெற்றது.

தொடர்ச்சி P2



2024இல் தொழில்களுக்காக

## வெளிநாடுகளுக்கு 312,836 பேர் பறந்தனர்

கடந்த 2024ஆம் ஆண்டில் சுமார் 312,836 பேர் வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். இது கடந்த 2023ஆம் ஆண்டை விட அதிகரித்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## நாமல் குமார கைது



சமூக ஆர்வலர் நாமல் குமாரவை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர், புதன்கிழமை (01) கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## பாக்கு மரத்திலிருந்து விழுந்த சிறுவன் பலி

மாவனெல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அம்புலுகல பிரதேசத்தில் பாக்கு மரத்திலிருந்து, தவறி கீழே விழுந்த 16 வயதான சிறுவன் செவ்வாய்க்கிழமை (31) காலை உயிரிழந்துள்ளதாக மாவனெல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



## “சேவைகள் நிறைவேற செயலாற்றுவோம்”

கடந்த சில மாதங்களாக அரச ஊழியர்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவிப்பதாகவும், புதிய வருடத்தில் முன்னரை விட பிரயத்தனங்களுடனும் உற்சாகத்துடனும் மக்களுக்கு அரச சேவையின் ஊடாக நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகளை நிறைவேற்ற அனைவரும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டுமெனவும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## மண்ணெண்ணெய் மட்டும் குறைந்தது

மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்தின் படி, 2024 டிசெம்பர் (31) நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருட்களின் விலைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## தாயும், குழந்தையும் எரிந்து கருகினர்

தலாவ பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பெண்ணொருவர், தன்னுடைய குழந்தையை தீ மூட்டிக் கொன்றதுடன், தானும் தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ள சம்பவம் செவ்வாய்க்கிழமை (31) மாலை இடம்பெற்றுள்ளது.

39 வயதான தாய், தன்னுடைய இரண்டு வயதும் ஒன்பது மாதங்களேயான குழந்தையை இவ்வாறு தீ மூட்டிக் கொன்று விட்டு, தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

மரணமடைந்த அந்த பெண், பிந்துன்கட, ஹித்தோகம பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டவர், அங்குள்ள பெண்கள் சங்கத்தில் பொருளாளராக பணியாற்றுகின்றார். அந்த சங்கத்தில் ஏற்பட்டிருந்த பொருளாதார பிரச்சினைகள் காரணமாக, இவ்வாறு தவறான முடிவை எடுத்திருக்கக் கூடுமென,

தொடர்ச்சி P2



## “தேசியப் பணிக்கு ஆயத்தமாக வேண்டும்”

குறுகிய பேதங்களுக்கு அப்பாற்பட்டு நாட்டைக் கட்டியெழுப்பும் தேசியப் பணிக்கு ஆயத்தமாக வேண்டும். வெளிப்படைத்தன்மையுடன் நாட்டுக்கும் மக்களுக்கும் பொறுப்புக்கூறக்கூடிய உன்னத சேவையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசியல் தலைவர்கள் மற்றும் அரச ஊழியர்கள் ஒன்றிணைந்து இதனை ஒரு பொறுப்பாகவும் கடமையாகவும் கருத வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

வடக்கு, கிழக்கில் அலை மாறினால்

## “நிலை மாறும்”



நாட்டில் ஏற்பட்டுள்ள இனப் பிரச்சினை தீர்க்கப்பட்டு, பயங்கரவாத தடைச் சட்டம் முற்றாக ஒழிக்கப்பட்டால் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் பொருளாதார ரீதியில் அச்சப்பட வேண்டிய அவசியம் ஏற்படாது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

உடல் திசுக்களுக்குள் புகுந்து

## புண்களை ஏற்படுத்தும் ‘மைக்ரோபிளாஸ்டிக்ஸ்’



உணவுகளில் கலந்து உள்ள மைக்ரோபிளாஸ்டிக்ஸ் (Microplastics) அப்படியே உடலின் உள்ளே புண்களை ஏற்படுத்தும் என ஆய்வு அறிக்கை தெரிவித்துள்ளது.

உலகம் முழுக்க மைக்ரோபிளாஸ்டிக்ஸ் அதிகரித்துள்ளது. நாம் சாப்பிடும் உணவு தொடங்கி உண்ணும் உணவு வரை எல்லா இடத்திலும் மைக்ரோபிளாஸ்டிக்ஸ் தான் இருக்கிறது. ஏன் மனித இரத்தத்தில் சிறிய அளவிலான பிளாஸ்டிக் துகள்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது. சர்வதேச அளவில் மருத்துவர்கள், ஆராய்ச்சியாளர்கள் இடையே இந்த செய்தி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பிளாஸ்டிக்கின் சிறிய துகள்களை Microplastics என்று அழைப்பார்கள். உலகம் முழுக்க எல்லா இடத்திலும் Microplastics நீக்கமற நிறைந்து உள்ளது. எல்லா இடத்திலும் என்றால் எவரெஸ்டில் கூட பிளாஸ்டிக் துகள்கள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# "வெற்றியடைய முடியும்"

அந்த சவாலும் பொறுப்பும் எங்களிடம் உள்ளது.

அதனை நிறைவேற்றுவதற்காக நானும் எனது அமைச்சரவை, பிரதி அமைச்சர்கள் உட்பட முழு அரசியல் அதிகாரமும் அதற்காக நின்று அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம்.

புதிய அரசியல் கலாசாரத்தின் ஆரம்பத்துடன், இந்த வருடம் எமது நாட்டில் உதிக்கின்றது. இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கு தேவையான அடித்தளத்தை நாங்கள் தயார் செய்து கொண்டிருக்கின்றோம். அரசியல் கலாசாரம், வீண் விரயம், குடும்ப வாதம், மக்களுக்கு எதிரான எல்லையற்ற அதிகாரப் பிரயோகம், மக்களுக்கு மேலான அரசியல்வாதியை உருவாக்குதல், இவையனைத்தும் ஒழிக்கப்பட்டு, மக்களின் தேவைக்கேற்ப, சவால்களை வென்று, புதிய அரசியல் கலாசாரத்தை ஆரம்பித்துள்ளோம்.

இந்த புதிய ஆண்டு நமது பொருளாதாரம், கடந்த சில ஆண்டுகளில் நமது பொருளாதாரம் மிகவும் திவாலான நிலைக்கு சரிந்துள்ளது என்பதை நாம் அறிவோம். பொருளாதாரத்தின் மேற்பரப்பு மட்டத்தில் சில ஸ்திரத்தன்மையை உருவாக்கியுள்ளோம். கடந்த ஆண்டின் பிற்பகுதியில், நாங்கள் அதிகாரப்பூர்வமாக திவால் நிலையிலிருந்து வெளியேற முடிந்தது. அதற்காக நிதியமைச்சின் செயலாளர், மத்திய வங்கி ஆளுநர், அரசியல் அதிகாரிகள் உள்ளிட்ட அதிகாரிகள் பெரும் பணியைச் செய்துள்ளனர். பொருளாதாரத்தின் மேற்பரப்பு மட்டத்தில் நாம் சில ஸ்திரத்தன்மையை உருவாக்கியுள்ளோம் என்று நினைக்கிறேன். ஆனால் இந்த ஆண்டு அது

**" நமது காவல்துறை, உளவுத்துறை, நமது முப்படைகளும் மிகவும் சுறுசுறுப்பான பணியைச் செய்து நாட்டின் பாதுகாப்பில் நம்பிக்கையை நிலைநாட்ட முடிந்தது. அத்துடன், எமது நாட்டில் சட்டத்தின் ஆட்சியை மீண்டும் நிலைநாட்டுவதற்கு நாம் வலுவாகச் செயற்பட ஆரம்பித்துள்ளோம்**

போதாது. எமது பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தேவையான பொருளாதார நிகழ்ச்சி நிரலை இந்த புத்தாண்டில் நடைமுறைப்படுத்தத் தயாராக உள்ளோம். மேலும், நமது நாடு பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு வகையான பாதுகாப்பு அச்சுறுத்தல்களை சந்தித்த நாடு. ஆனால், நமது நாட்டின் பாதுகாப்பை மிகச் சிறப்பாக உறுதிப்படுத்தி இருக்கிறோம் என்பதை மிகவும் மகிழ்ச்சியாகவும் உறுதியாகவும் கூறலாம்.

குறிப்பாகக் கடந்த வருடம் அறுகம்பேவை மையமாக வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டது உங்களுக்கு நினைவிருக்கலாம். நமது காவல்துறை, உளவுத்துறை, நமது முப்படைகளும் மிகவும் சுறுசுறுப்பான பணியைச் செய்து நாட்டின் பாதுகாப்பில் நம்பிக்கையை நிலைநாட்ட முடிந்தது. அத்துடன், எமது நாட்டில் சட்டத்தின் ஆட்சியை மீண்டும் நிலைநாட்டுவதற்கு நாம் வலுவாகச் செயற்பட ஆரம்பித்துள்ளோம்.

நம் நாட்டில் நீண்ட காலமாக சட்டத்தின் ஆட்சி என்பது புறக்கணிக்கப்பட்ட விடயமாக மாறிவிட்டது. குறிப்பாகக் குற்றவாளிகள் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள். ஊழல்வாதிகள் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள். அரசியல் அதிகாரங்கள் சட்டத்தை மீறுகின்றன மற்றும் அரசியலமைப்பை தங்கள் விருப்பப்படி உடைக்கின்றன. நமது நாட்டின் முன்னாள் ஜனாதிபதிகள் அரசியல் சாசன விதிகளை பல சந்தர்ப்பங்களில் மீறியுள்ளதாக உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

எனவே, இந்த சட்டத்தின் மேலாதிக்கத்தை மீண்டும் நிலைநாட்ட நாங்கள் கடுமையாக உழைத்து வருகிறோம். இலஞ்சம், ஊழல், மோசடி மற்றும் வீண் விரயம் ஆகியவை நமது நாட்டின் அரச அமைப்பு, அரசியல் அமைப்பு மற்றும் ஒட்டுமொத்த சமூகம் முழுவதும் பரவலாகப் பரவி இருப்பதை நாம் அறிவோம். இது ஒரு புற்றுநோயாக நம் நாடு முழுவதும் பரவியுள்ளது. இந்த ஊழலையும் மோசடியையும் தடுக்க நாம் கடுமையாக உழைக்க வேண்டும். அதில் நமது நாட்டின் சட்டமா அதிபர் திணைக்களம் பெரும் பங்கு வகிக்கிறது என்று நினைக்கிறேன்.

சட்ட மா அதிபர் திணைக்களம் தமக்கு வழங்கப்பட்டுள்ள பாத்திரத்தைச் சரியான முறையில் நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆதரவை வழங்கும் என்று நான் நினைக்கிறேன். அத்துடன், எமது நாட்டை ஊழலற்ற நாடாக மாற்றியமைப்பதில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் நீதித் துறையினர் முக்கிய பங்கு வகிக்கின்றனர் என்றார்.

# "பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டிய நிலை ஏற்படும்"

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அவர், புதிய அரசாங்கத்தின் நிர்வாகத்தைத் தொடர்ந்து எரிபொருள் விலை குறையும் என பொதுமக்கள் எதிர்பார்த்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த புத்தாண்டின் தொடக்கத்தில் எரிபொருள் விலை குறையும் என எதிர்பார்த்தோம், ஆனால், அந்த நம்பிக்கை தற்போது கனவாக மாறியுள்ளது.

"பஸ் கட்டணம் குறைக்கப்பட வேண்டுமானால், கொள்கை கணக்கீட்டின்படி டீசல் விலையைக் குறைந்தது 30 ரூபாவால் குறைக்க வேண்டும்.

மேலும், எரிபொருள் விலை மட்டுமின்றி, உதிரிப் பாகங்கள் மற்றும் இதர உபகரணங்களின் விலையும் குறைய வேண்டும். தனியார் பஸ் சேவை தற்போது நெருக்கடியான நிலையில் உள்ளது. எனவே, இந்த ஆண்டு ஜூலை மாதத்திற்குப் பின், செலவுகளை நிர்வகிக்க பஸ் கட்டணத்தைக் கணிசமாக உயர்த்த வேண்டிய நிலை ஏற்படும்" என்றார்.

இதேவேளை, சாதாரண புத்தம் புதிய பஸ் ஒன்றின் விலை 16 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதுடன், அதன் பராமரிப்பு செலவுகளும் அதிகரித்துள்ளன. இது தவிர்க்க முடியாத பேருந்து கட்டண உயர்வுக்கு வழிவகுக்கும் என அவர் கூறியுள்ளார்.

# மண்ணெண்ணெய் மட்டும் குறைந்தது

அதன்படி, மண்ணெண்ணெய் 05 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது. அதன் புதிய விலை 183 ரூபாவாகும்.

இதேவேளை, பெற்றோல் மற்றும் டீசல் விலைகளில் எவ்விதமான மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

அத்துடன், லங்கா ஐஓசி மற்றும் சினோபெக் ஆகிய நிறுவனங்களும் தமது எரிபொருளின் விலைகளை மாற்றமின்றி தொடர தீர்மானித்துள்ளன.

# வெளிநாடுகளுக்கு 312,836 பேர் பறந்தனர்

அதன்படி, 2024ஆம் ஆண்டில், 185,162 ஆண் தொழிலாளர்கள் மற்றும் 127,674 பெண் தொழிலாளர்கள் வேலைக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

அதிகளவான தொழிலாளர்களில் குவைத்துக்கு 77,546 பேரும், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் 51,550 பேரும் சென்றுள்ளனர்.

இதேவேளை, தென் கொரியா, இஸ்ரேல் மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் வேலை தேடும் இலங்கையர்களின் போக்கு அதிகரித்து வருவதை புள்ளிவிபரங்கள் வெளிப்படுத்துகின்றன.

2024ஆம் ஆண்டில், 7,098 இலங்கையர்கள் தென் கொரியாவிற்கும், 9,665 பேர் இஸ்ரேலுக்கும், 8,665 பேர் ஜப்பானுக்கும் சென்றுள்ளனர்.

இதன் மூலம் கடந்த ஆண்டு இறுதிக்குள் இலங்கைக்கு 6,462 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைத்துள்ளது.

வெளிநாட்டு ஊழியர்களின் அந்நிய செலாவணி வருமானமும் கணிசமாக அதிகரித்துள்ளது. 2023இல் 164,680 ஆண் மற்றும் 132,904 பெண் தொழிலாளர்கள் உட்பட 297,584 இலங்கையர்கள் வேலைக்காக வெளிநாடு சென்றுள்ளனர்.

# "சேவைகள் நிறைவேற செயலாற்றுவோம்"

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் 2025 ஜனவரி 1ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட Clean Sri Lanka வேலைத்திட்டத்திற்கு இணைவாகப் பிரதமர் அலுவலகத்தில் கடமைகளை ஆரம்பித்த போதே பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இதனைத் குறிப்பிட்டுள்ளார்.

இங்குக் கருத்து தெரிவித்த பிரதமரின் செயலாளர் பிரதீப் சப்புதந்தரி,

மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை நாட்டில் ஏற்படுத்துவதற்கென எமக்கு பாரிய பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. பொறுப்புகள், கடமைகள் தொடர்பில் முன்னரை விட அவதானத்துடனும், பொறுப்புடனும் மக்கள் எதிர்பார்ப்பை யதார்த்தமாக மாற்றுவதற்கு பணியாற்ற வேண்டும். எமது நடத்தை, வேலை செய்யும் இயல்பு மற்றும் அனைத்து விதங்களிலும் மக்கள் மாற்றத்தை எதிர்பார்க்கின்றனர். அதற்கென அரச ஊழியர்கள் முன்னின்று செயற்பட வேண்டுமெனப் பிரதமரின் செயலாளர் பிரதீப் சப்புதந்தரி தெரிவித்துள்ளார்.

# "தேசியப் பணிக்கு ஆயத்தமாக வேண்டும்"

சாதாரண மக்களுக்கு முன்னுரிமை வழங்குவதன் மூலம் உன்னத, நேரிய பயனுள்ள பொதுச் சேவையை வழங்குதல் போலவே நெறிமுறைகளைப் பேணுவதுடன், பொதுச் சொத்துக்கள் மற்றும் வளங்களைத் துஷ்பிரயோகம் செய்ய அனுமதிக்கக் கூடாது. நாட்டுக்குச் செயல் திறமையோடு வினைத்திறனான சேவையை ஆற்ற வேண்டும். தனிநபர் இலாபத்தை விட நாட்டு மக்களின் நலனுக்காகக் கூட்டாகச் செயற்பட ஒன்றிணையுமாறும் குறிப்பிட்டுள்ளார்.

2025 ஆம் புத்தாண்டில் கடமைகளை ஆரம்பிக்கும் முகமாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் புதன்கிழமை (01) காலை ஏற்பாடு செய்யப்பட்ட உத்தியோகபூர்வ நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும்,சர்வமத தலைவர்களின் ஆசீர்வாதங்களுடன் மிகவும் நேர்த்தியான முறையில் இங்கு புது வருடக் கடமைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# தாயும், குழந்தையும் எரிந்து கருகினர்

அப்பெண்ணின் கணவன், அளித்துள்ள வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலங்கள் அனுராதபுரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள தலாவ பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பாக்கு மரத்திலிருந்து விழுந்த சிறுவன் பலி

மற்றுமொரு சிறுவனுடன் இணைந்து பாக்கு மரத்தில் ஏறி பாக்குகளைப் பறிக்க முயன்ற போது, கீழே தவறி வீழ்ந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

காயமடைந்த சிறுவன் மாவனெல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக கூறியுள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# "நிலை மாறும்"

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் புதன்கிழமை (01) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

புலம்பெயர்ந்துள்ள எம் உறவுகளின் மூலமாக எம் நாட்டை உயர்த்துவதற்கான வாய்ப்புகள் உள்ளன. எனவே, நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு பயங்கரவாத தடைச் சட்டம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். இதை ஜனாதிபதி கருத்தில் கொள்ள வேண்டும்.

மேலும், 13ஆவது திருத்தச் சட்டம், இந்திய இலங்கை ஒப்பந்தம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தக் கூடிய வகையில், செயற்பாடுகள் அமைய வேண்டும். எனவே, அனைத்துவிதமான வசதிகளும் உள்ளன என்று எமது கிராம மக்கள் கூறுமளவுக்கு இப்புதிய ஆண்டில் அரசாங்கம் செயற்படவேண்டும்.

அதற்காக நாங்களும் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருக்கிறோம். பின்தங்கிய கிராமங்கள் இந்த வருடத்தில் முழுமையாக வளர்ச்சி பெற வேண்டும். அதற்கான செயற்பாடுகளை இந்த அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்.

பிரிந்து செயல்படுகின்ற தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும். நாங்கள் ஒற்றுமையாகச் செயல் படவில்லை என்றால் நம் மண்ணையும் மக்களையும் உதாசீனம் செய்யும் கட்சிகளாகவே நாம் இருப்போம். எதிர்வரும் காலங்களில் நாங்கள் ஒற்றுமையாக இல்லை என்றால் தேசியக்கட்சிகள் இல்லாது போகின்ற துர்ப்பாக்கிய நிலை காணப்படும்.

எனவே, எதிர் வருகின்ற தேர்தல்களில் நாங்கள் ஒற்றுமையாகச் செயல்பட வில்லை என்றால் தென்பகுதியில் ஏற்பட்டுள்ள அனுரவின் அலை வடக்கு கிழக்கிலும் ஏற்படும். இதனால் பாதிப்புகள் எமக்கு ஏற்படுத்தும் என்பது உண்மை. மக்களின் எதிர்பார்ப்பு தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒற்றுமையாகச் செயல் படுங்கள் என்பதே.அந்த ஒற்றுமை இல்லை என்றால் நாங்கள் காணாமல் போய் விடுவோம் என்றார்.

## பாறையில் வேன் மோதி இருவர் பலி

கொழும்பு - பதுளை பிரதான வீதியில் ஹப்புத்தளை - வியாரகல பகுதியில் பயணித்த வேன், புதன்கிழமை(31) மாலை வீதியை விட்டு விலகி பாறையில் மோதியதில் இருவர் உயிரிழந்துள்ளதுடன், 16 பேர் காயமடைந்துள்ளதாக ஹப்புத்தளை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஹொரணையில் இருந்து அனுராதபுரத்திற்கு சுற்றுலா சென்று திரும்பிக் கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த குழுவினர் இந்த அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ளனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் ஹொரணை, ரெட்டியால பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# புண்களை ஏற்படுத்தும் 'மைக்ரோபிளாஸ்டிக்ஸ்'

கடலுக்கு அடியில் பல ஆயிரம் அடியிலும் கூட, பிளாஸ்டிக் துகள்கள் இருந்துள்ளன. பிறந்து சில மாதங்களே ஆன குழந்தையின் மலத்தில் கூட, பிளாஸ்டிக் துகள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இப்போது, அதில் புதிய வரவாக இணைந்து இருப்பது தான் மனித இரத்தம். ஆம்! மனித இரத்தத்தில் செல்களோடு, செல்களாக வாடகையே கொடுக்காமல் பிளாஸ்டிக் துகள்கள் உள்வாடகைக்கு இருந்ததை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அதன்படி, மொத்தம் 22 பேரின் இரத்தத்தைச் சோதனை செய்துள்ளனர். அதில் 17 பேரின் இரத்தத்தில் பிளாஸ்டிக் துகள்கள் இருந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதாவது, மொத்தம் 77 சதவீதம் பேரின் உடலில் இந்த ஆராய்ச்சியில் பிளாஸ்டிக் துகள்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நெதர்லாந்தில் இருக்கும் Vrije Universiteit Amsterdamஇல் இருக்கும் ஆராய்ச்சியாளர்கள் மூலம் செய்யப்பட்ட ஆய்வில் இந்த கண்டுபிடிப்பு நிகழ்த்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக Environment International இதழில் ஆய்வுக் கட்டுரையும் வெளியிடப்பட்டுள்ளது.

இரத்தத்தில் பாலிமர் பொருட்கள் எனப்படும் பிளாஸ்டிக் துகள்கள் இருந்துள்ளது. இப்படிப்பட்ட நிலையில், தான் உலகம் முழுக்க பிளாஸ்டிக் பொருட்களை உணவு சம்பந்தப்பட்ட

**" னாவில் உள்ள Zhejiang வேளாண்மை மற்றும் வனவியல் பல்கலைக்கழகத்தின் தலைமையிலான ஆராய்ச்சி மையத்தில் இது தொடர்பான கண்டுபிடிப்புகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. மனிதர்களில் மைக்ரோபிளாஸ்டிக்ஸ் புண்களை ஏற்படுத்துகின்றன. திசுக்களுக்கு உள்ளே இவை புண்களை ஏற்படுத்துகின்றன**

விடயங்களில் பயன்படுத்தக் கூடாது என்று கோரிக்கைகள் வைக்கப்படுகின்றன.

உணவுகளில் கலந்து உள்ள Microplastics அப்படியே உடலின் உள்ளே புண்களை ஏற்படுத்தும் என்று ஆய்வு அறிக்கை தெரிவித்து உள்ளது.

சீனாவில் உள்ள Zhejiang வேளாண்மை மற்றும் வனவியல் பல்கலைக்கழகத்தின் தலைமையிலான ஆராய்ச்சி மையத்தில் இது தொடர்பான கண்டுபிடிப்புகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. மனிதர்களில் மைக்ரோபிளாஸ்டிக்ஸ் புண்களை ஏற்படுத்துகின்றன. திசுக்களுக்கு உள்ளே இவை புண்களை ஏற்படுத்துகின்றன. உடலில் பெரும்பாலான சேதமடைந்த திசுக்களில் மைக்ரோ மற்றும் நானோ பிளாஸ்டிக் உள்ளன. இவை உடலை நேரடியாக மறைமுகமாகப் பாதிக்கின்றன என்று அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் பயன்பாடு 1950களில் 1.5 மில்லியன் மெட்ரிக் டன்களில் இருந்து 2021இல் கிட்டத்தட்ட 390.7 மில்லியனாக உயர்ந்துள்ளது.

# தொல்லியல் துறையினருக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம்

1962ஆம் ஆண்டு தொடக்கம் 1985ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிகள் வரைக்கும் திருகோணமலை மாவட்டத்தில் மிகப்பெரிய நெற் களஞ்சியசாலையாக விளங்கிய குறித்த இடத்தில் 1985ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் குச்சவெளி பொலிஸ் நிலையம் தற்காலிகமாக இயங்கி வந்தது.

கடந்த ஆண்டு குச்சவெளி பொலிஸ் நிலையம் அவ்விடத்தில் இருந்து இடமாற்றம் சென்றதை அடுத்து, குறித்த இடம் மீண்டும் நெற்களஞ்சிய சாலையாக இயக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட நிலையில் கடந்த 2024.12.28ஆம் திகதி இரவு வேளையில் இலங்கை தொல்லியல் திணைக்களத்தினரால் அவ்விடம் தொல்லியல் திணைக்களத்துக்கு உரிய இடம் என தொல்லியல் துறை வசமானது.

ஏற்கெனவே அவ்விடத்தில் தொல்லியல் துறைக்கு என அதிலிருந்து நான்கு ஏக்கர் அளவு காணி ஒதுக்கப்பட்டு இருந்த நிலையில், அதற்கு மேல் அதிகமாக அடாவடியான முறையில் தொல்லியல் துறையினர் காணிகளை தம்பசப்படுத்தி கொண்டது. குறித்த இடமானது மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ கூடிய இடமாக

**" குறித்த இடமானது மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ கூடிய இடமாக விளங்குவதோடு, இந்து சமய கோயில் முஸ்லிம் பள்ளிவாசல் சிங்கள மக்களின் விகாரை போன்றன குறித்த இடத்தில் மிக அருகில் இருப்பது குறிப்பிடத்தக்கது**

விளங்குவதோடு, இந்து சமய கோயில் முஸ்லிம் பள்ளிவாசல் சிங்கள மக்களின் விகாரை போன்றன குறித்த இடத்தில் மிக அருகில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அனேகமான காணிகள் தொல்லியல் துறையினர் அடாவடியான முறையில் கையகப்படுத்தப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த நடவடிக்கையை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு கோரி குச்சவெளி பிரதேச விவசாயிகள் ஒன்று கூடிக் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியதோடு உடனடியாக நடவடிக்கை எடுத்துத் தீர்வினை பெற்று இந்தக் காணியை மீண்டும் நெற்களஞ்சிய சாலையாகப் பயன்படுத்துவதற்கு அனுமதி தருமாறு கோரி குச்சவெளி பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றும் கையளித்தனர்.

# “புத்தாண்டு பிறக்கும் போதும் பல போர்கள் நடக்கின்றன”

■ எஸ்.ஆர்.லெம்பேட்

புதிய ஆண்டு பிறக்கும் போதும், நாங்கள் வாழும் சூழலில் எத்தனையோ போர்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இதனால் மக்கள் கொல்லப் படுவதோடு,அனாதைகளாக இடம் பெயர்கின்றனர். எனவே, ஜூபிலி ஆண்டில் உங்கள் அனைவருக்கும் ஆசீர்வாதங்கள் நிரம்பக் கிடைக்க வேண்டும் என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

2025ஆம் ஆண்டு எங்களுக்குப் புத்தாண்டாகப் பிறக்கிறது. இயேசுநாதர் பிறந்து 2025ஆம் ஆண்டு நிறைவேறுகின்றது என்பதை உணர்ந்து இந்த புத்தாண்டை அன்புடன் வரவேற்போம். நாங்கள் வாழும் சூழலில் எத்தனையோ போர்கள் நடந்து கொண்டிருக்கின்றன. உக்ரேன் நாட்டிற்கு எதிராக ரஷ்யா போராடிக்கொண்டு இருக்கிறது.

இஸ்ரேல் பாலஸ்தீனத்திற்கு எதிராக காஸாவில் போர் இடம்பெறுகின்றது.இந்த போரின் போது, அப்பாவி மக்கள் கொல்லப்படுகின்றனர்.

தமது உடைமைகளை இழக்கின்றார்கள்.பாரிய துக்கத்துடன் அவர்கள் வேறு இடங்களுக்குப் பாதுகாப்பு தேடிச் செல்கின்றனர். அவர்கள் எல்லாம் அனாதைகள் போல் பல இடங்களில் கூடி இருக்கிறார்கள்.

எனவே, பிறந்துள்ள புத்தாண்டு 2025ஆம் ஆண்டு திருத்தந்தை பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களினால் யூபிலி ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டது. அந்த யூபிலி ஆண்டின் ஆசீர்வாதங்கள் உங்கள் அனைவருக்கும் நிரம்பக் கிடைக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.



## மீண்டும் சேவை

சீரற்ற காலநிலை காரணமாகத் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த தமிழகத்தின் நாகப்பட்டினத்திலிருந்து காங்கேசன்துறைக்கான பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை, ஜனவரி 2ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த நிலையில், நிலவும் காலநிலையைக் கருத்திற் கொண்டு கப்பல் போக்குவரத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் குறித்த கப்பல் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சுந்தர்ராஜன் தெரிவித்துள்ளார்.

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது

அனுராதபுரம்- ஒயாமடுவ, மாணியங்கமுவ பகுதியில் செவ்வாய்க்கிழமை (31) அன்று உள்நாட்டுத் துப்பாக்கியுடன் 56 வயதான நபர் ஒருவர் ஒயாமடுவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் இந்த துப்பாக்கியைப் பயன்படுத்தி பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஒயாமடுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் அநுராதபுரம் நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## இலவச மருத்துவ சேவை முகாம்

■ பு.கஜிந்தன்

பளை - பச்சிலைப்பள்ளி மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க, பாராளுமன்ற உறுப்பினரான ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தியின் ஒழுங்குபடுத்தலில் கிளாலி பகுதி மக்களுக்கு இலவச மருத்துவ முகாம் செவ்வாய்க்கிழமை (31) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் வினோதனின் நேரடி வழிப்படுத்தலிலே இந்த இலவச மருத்துவச் சிகிச்சை முகாம் செயற்படுத்தப்பட்டது.

இந்த மருத்துவ முகாமில் பல மக்கள் மருத்துவ சேவையைப் பெற்றுக்கொண்டதை அவதானிக்க முடிந்ததுடன் இவ்வாறான தொடர்ச்சியான மருத்துவ முகாம்களை நடத்துவதற்கு கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சம்மதம் தெரிவித்துள்ளார்.

## நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறிய வர்த்தகர்கள்

வடமாகாணத்தில் கடந்த 2024ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட சுமார் 3,499 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களின் ஊடாக 02 கோடியே 58 இலட்சத்து 38 ஆயிரத்து 500 ரூபாய் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் வடமாகாண உதவிப்பணிப்பாளர் அப்துல் லத்தீவ் ஜக்வார் சாதிக் தெரிவித்துள்ளார்.

மேலும், வட மாகாணத்தில் சுமார் 3,445 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், 3,361 வர்த்தகர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், வவுனியா மாவட்டத்தில் 744 சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதுடன், 903 வர்த்தகர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.



அதில் 946 வர்தகர்களுக்கு வவுனியா நீதிமன்றத்தின் ஊடாக 57 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாய் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அரிசி விற்பனை தொடர்பான வடமாகாணத்தில் 774 விசேட சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், வவுனியா மாவட்டத்தில் 126 விசேட சுற்றிவளைப்பும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## திடீரென மயங்கி விழுந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஊரெழு கிழக்குப் பகுதியில் திடீரென மயங்கிய இளம் குடும்பஸ்தர், வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது உயிரிழந்ததுள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான கிருபரஞ்சன் (38 வயது) என்பவரே உயிரிழந்துள்ளார்.

தனியார் கல்வியில் நிலையத்துக்குத் தனது மகளை அழைத்துச் செல்வதற்காக, திங்கட்கிழமை(30) காலை மோட்டார் சைக்கிள் எடுக்கச் சென்றபோது திடீரென மயங்கி விழுந்துள்ளார்.

இதனையடுத்து, உடனடியாக அவரை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் அங்கு உயிரிழந்தார். குறித்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் செவ்வாய்க்கிழமை(31) விசாரணை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக உத்தரவிட்டுள்ளார்.

## புதிய ஆண்டின் முதல் நாள்

உதயமாகியுள்ள 2025ஆம் ஆண்டின் முதல் நாள் கடமைகளை ஆரம்பித்தல், மற்றும் சத்தியப் பிரமாணம் நிகழ்வுகள் நாட்டில் பல பிரதேசங்களில் உள்ள அரசாங்க அலுவலகங்களில் புதன்கிழமை (01) இடம்பெற்றன.

– தமிழ்மிரர் நிருபர்கள்

















WCIC
Women's Chamber of Industry and Commerce
Engage - Empower - Enrich
In Collaboration with
USAID
FROM THE AMERICAN PEOPLE
WCIC
மேன்மைக்கு கௌரவம்
Women Entrepreneur Awards
வலுவூட்டல் AIA INSURANCE

இன்னல் மிகுந்த காலத்திலும், சவால்களை எதிர்கொள்ளும்
சிறந்த பெண் தொழில்முனைவோரின்
துணிவினைப் பகிர்ந்து போற்றுவோம்
WCIC பிரதிபாபிஷேக மாபெரும் விருது நிகழ்வு
2025 ஜனவரி 07 ஆம் திகதி
கொழும்பு போல் ரூம், ஹில்டன் ஹோட்டலில்.
இரவு 7.00 மணி தொடக்கம்
டிக்கட் - ரூ.16,500/- (இரவு உணவு உட்பட)
டிக்கட்டுகளுக்கு:
WCIC
380/110 சரண வீதி, பௌத்தாலோக்க மாவத்தைக்கு அருகாமையில், கொழும்பு 07, இலங்கை.

அனுசரணையாளர்கள்
பிளட்டினம் — AIA — HEALTHIER, LONGER, BETTER LIVES
டயமன்ட் — DFCC Aloka (Banking Partner)
COLLABORATIVE PARTNER — USAID
கோல்ட் — McLARENS GROUP — SUNQUICK
சில்வர் — The World Of Hayleys
ப்ரோன்ஸ் — DIMO — IMPRA
ஊடக பங்காளர்-அச்சு / சமூக ஊடகம்
THE SUNDAY TIMES — DailyMirror — Daily FT — தமிழ்Mirror — Daily FT ONLINE — DailyMirror ONLINE — தமிழ்Mirror ONLINE
உபசரிப்புப் பங்காளர் — Hilton COLOMBO
விமானப் பங்காளர் — SriLankan
அறிவுசார் பங்காளர் — EY Building a better working world
தொடர்பாடல் பங்காளர் — triad

மகளிர் தொழில்துறை மற்றும் வர்த்தக சம்மேளனம் இலங்கை
இல.380/110, சரண வீதி, பௌத்தாலோக்க மாவத்தைக்கு அருகாமையில், கொழும்பு 07, இலங்கை. தொ.பே: 0112 671 762, மொபைல்: 0766 848 080

# தனித்துவத்தை விட கூட்டுத்தன்மை முக்கியமானது

நிகழ்காலத்திலிருந்து எதிர்காலம் கட்டமைக்கப்படுகிறது. நிகழ்காலம் விரைவில் கடந்த காலமாக மாறி வருகிறது. எதிர்காலத்தில் சிறந்த முதலீடு நிகழ்காலத்தில் உள்ளது. எனவே, எதிர்காலத்தை உருவாக்க தற்போதைய அனுபவம் மிகவும் முக்கியமானது. 2025ஆம் ஆண்டை மறுமலர்ச்சி ஆண்டாகப் பெயரிடலாம். மேலும், இது மக்களின் எதிர்பார்ப்பு ஆண்டு; சமுதாயத்தில் உள்ள பெரும்பான்மையான மக்கள் தங்கள் நம்பிக்கைகளுக்கு அடித்தளம் அமைக்கும்

2048ஆம் ஆண்டு இலங்கை அபிவிருத்தியடைந்த நாடாக மாறும் என முன்னர் ஆட்சியாளர்கள் மக்களுக்கு நம்பிக்கை வெளியிட்டிருந்தனர். அதுவரை அனைத்து இன்னல்களையும் தாங்கி, வயிற்றை இறுக்கிக் கொள்ளுமாறு மக்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அத்தகைய நாட்டை ஒரு புதிய சமூக மாற்றத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். எனவே, இதற்கு எளிய உடனடி குறுக்குவழிகள் இருப்பதாக நாங்கள் நினைக்கவில்லை.

ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து நூறு நாட்களே கடந்துள்ளன. புதிய அரசாங்கம் பதவியேற்று ஆறு வாரங்களுக்கு மேலாகியும் இல்லை. எனவே, எழுபத்தாறு வருடங்களாகத் தீர்க்கப்படாத நம்பிக்கைகள் குறுகிய காலத்தில் தீர்ந்துவிடும் என்று நினைக்கும் அளவுக்கு நாம் தாழ்ந்த மனப்பான்மை கொண்டவர்கள் அல்ல.

மக்கள் எதிர்பார்க்கும் சரியான பாதையில் நாட்டை கொண்டு செல்வதற்குக் குறுகிய கால மற்றும் நீண்ட கால வேலைத்திட்டங்கள் உள்ளன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த காலகட்டத்தில் அரசாங்கம் எதிர்பாராத பல பிரச்சனைகளையும் நெருக்கடிகளையும் சந்திக்க வேண்டியிருந்தது.

நம்பகமான மற்றும் நியாயமான அமைப்புக்காக பொதுமக்கள் தியாகம் செய்ய தயாராக இருப்பதாக நாங்கள் இன்னும் நம்புகிறோம். கட்சி, நிறம் எதுவாக இருந்தாலும், நாட்டின் முன்னேற்றத்திற்கு மக்களின் நம்பிக்கை மிகவும் முக்கியமானது. “சுத்தமான இலங்கை” திட்டம் அதன் முதன்மையான திட்டங்களில் ஒன்றாகும்.

ஊழல், மோசடி, வீண் விரயம், உறவுமுறை போன்ற பிரச்சினைகளால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. எனவே, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு குறிப்பிட்ட மூலோபாயத் திட்டங்களை சமூகமயமாக்குவது அவசியம். மக்களுடன் நல்ல தொடர்பு உறவை உருவாக்குவதும் மிக அவசியம்.

தனித்துவத்தை விட கூட்டுத்தன்மை முக்கியமானது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில்: இவ்வளவு காலமாக, தனிநபர்களை விட கூட்டுச் செயல்களால் மக்கள் வெற்றியை அடைந்துள்ளனர்.

எனவே, 2025ஆம் ஆண்டு மக்களின் எதிர்பார்ப்புகளை நனவாக்கும் ஆண்டாக அமையும் என நினைக்கிறோம். எனவே, இது மறுமலர்ச்சி ஆண்டாக மட்டுமன்றி, மக்களின் அபிலாசை ஆண்டாகவும் அமையும் என எதிர்பார்க்கிறோம்.

அதற்காக அரசாங்கத்தையும் அதன் திணைக்களங்களையும் அரசாங்கத்துடன் இணைந்த ஏனைய நிறுவனங்களை மட்டுமே எதிர்பார்த்துக் காத்திருப்பது முட்டாள்தனமானது.

ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு ஒவ்வொரு தனிமனித செயற்பாடுகள் இன்றியமையாது. அதற்காக, பேதங்களை மறந்து அனைவரும் ஒன்றிணைந்து ஓரணியில் நிற்பதே காலத்தில் கட்டாயமாகும். இல்லையேல் என்னதான், முயற்சி செய்தாலும், அதற்கான பலனை முழுமையாக அனுபவிக்க முடியாது என்பதை அனைவரும் கவனத்தில் கொள்வது காலத்தின் கட்டாயமாகும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

சுய நலமில்லாமல் வாழ்பவர்களைப் பலர் சுரண்ட நினைக்கின்றார்கள். உறவுகளை, உதவுபவர்களை எளிதாக ஏமாற்றுபவர்கள், தங்களை தாங்களே சிறுமைப்படுத்துகின்றனர்.

இத்தனை நடந்த பின்னரும் கூட, தாராள மனம் படைத்தோர் தங்களது நல்ல செயல்களை நிறுத்துவதும் இல்லை.

இந்த உலகில் எல்லாமே நடக்கும். பெற்றோரை மதிக்காத பிள்ளைகள், ஆசானை மறந்த மாணவர்கள், கொடுத்தவர்களுக்கே துரோகம் செய்யும் எத்தர்கள் என ஏராளமான பிரகிருதிகள் எம்மோடு வாழ்ந்தபடியே நடமாடுகின்றனர்.

சந்தோஷமாகக் கோவில் திருவிழாவை மக்கள் கொண்டாடும் போது. அங்கேயும் திருடர் கூட்டம் தங்கள் கைவரிசையைக் காட்டுகின்றனர். எப்படி எச்சரிக்கை செய்தாலும் மக்கள் அதனைக் கேட்காமல் பணம், பொருள்களைத் துஷ்டர்களிடம் இழக்கின்றார்கள்.

நல்வாழ்வு கெட்டவர்களுக்குப் பிடிக்காது. குற்றச்செயல்களை தங்களின் நிரந்தர தொழிலாகக் கொண்டவர்கள், திருந்துவது இல்லை. முற்காலத்தில் அரசர்கள், திருடர்களை எத்தர்களை மன்னிப்பதில்லை. பெரும் தண்டனை வழங்குவார்கள். உலக அமைதி தீ யோர்களை களைவதில் தங்கியுள்ளது.

நன்றி–பருத்தியூர் பால.வைரவநாதன்

# “இனி தமிழினத்தை காப்பாற்ற முடியாது”

முருகானந்தம் தவம்

சர்வதேச நாடுகளையே இலங்கையை நோக்கித் திரும்பிப்பார்க்க வைத்த, அந்நாடுகளின் தலைவர்கள், இராஜதந்திரிகளை இலங்கை விஜயங்களின்போது, தமிழர் தாயகத்திற்கு வரவைத்த, ஐ.நா. மற்றும் மனித உரிமை அமைப்புக்களின் பார்வையை, அக்கறையை ,அவதானிப்பைத் தமிழர் தாயகப் பகுதியில் குவிய வைத்த, இலங்கை அரசுகளுக்கு நெருக்கடி கொடுத்து, நிம்மதி கெடுத்து சர்வதேசத்தின் முன் குற்றவாளிகளாக நிற்க வைத்த தமிழ்த் தேசிய அரசியலும் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளும் தமிழ் மக்களும் இன்று பயணிக்கும் பாதை தமிழர் தாயகத்தின் எதிர்காலத்தை, எதிர்பார்ப்பை நிர்மூலமாக்கும் பாதையாகவேயுள்ளது.

‘அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு’ என்ற அடிப்படையில், தமிழ் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகத் தமிழ் மக்களின் உரிமை சார் விடயங்கள், தமிழ் மக்கள் மீதான போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அரசுக்கும் சர்வதேசத்திற்கும் அழுத்தம் கொடுத்து வந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தாய் கட்சியான இலங்கை தமிழரசுக் கட்சிக்குள் சந்தர்ப்ப சூழ்நிலையால் அப்போதைய தலைவர் இரா.சம்பந்தனின் தவறான தெரிவுகளினால் கோடரிக் காம்புகளாக நுழைந்தவர்களினால் தமிழர்களின் பலமான தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இன்று இல்லாதொழிக்கப்பட்டுள்ளதுடன், தமிழரசுக் கட்சியும் அழிக்கப்பட்டு வருகின்றது.

அதுமட்டுமன்றி, இன்று தமிழ்த் தேசிய அரசியலின் துன்பியலாக தமிழர்களின் தாய்க் கட்சியெனக் கூறப்படும் தமிழரசுக் கட்சியில் தமிழ்த் தேசியத்தைக் கைவிட்டு சுமந்திரன் அணியினால் முன்னெடுக்கப்படும் ‘மதுபான அனுமதி’ அரசியலும் வடக்கு மற்றும் புலம்பெயர் நாடுகளிலுள்ள வருமானத்தை மட்டும் இலக்காகக் கொண்ட சில ‘யூரியூபர்’ஸினால் ஊதிப்பெருப்பித்து முன்னெடுக்கப்படும் ‘அர்ச்சுனா ’ என்ற ‘காட்சி’ அரசியலும் தமிழர் அரசியலை ஆட்கொண்டு அலங்கோலப்படுத்தி வருகின்றன.

தமிழரசுக் கட்சிக்குள் சர்வாதிகாரிகள் போல, செயற்பட்ட சுமந்திரன் அணி தமது சக போட்டியாளர்களை வீழ்த்த, முன்னெடுத்த ‘தமிழரசுக் கட்சிக்குள் மதுபான அனுமதிப்பத்திரங்கள் பெற்றவர்கள்’ என்ற திட்டமிட்ட பிரசாரமே ‘பூமராங்’காக மாறி பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசிய அரசியலை பதம் பார்த்துள்ளதுடன், நாட்டின் ஏனைய சமூகங்களினால் தமிழ்த் தேசிய அரசியலைக் கேவலமான, கோமாளித்தனமா, அரசியலாகப் பார்த்து எள்ளி நகையாடும் நிலைமையையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆனாலும், சுமந்திரன் அணி தமது தலைக்கன நிலைப்பாட்டிலிருந்து இன்னும் மாறியதாகத் தெரியவில்லை. தொடர்ந்து மதுபானசாலைகளுக்கான அனுமதிகள் என்ற பிரசாரத்தின் மூலம் தமிழ்த் தேசிய அரசியலை நாறடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

தமிழ் மக்களின் தாய் கட்சியான தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பாராளுமன்றத் தேர்தல் வெற்றியை மட்டும் இலக்காக வைத்து தமிழ்த் தேசியத்தைக் கைவிட்டு இவ்வாறாக மதுபானசாலை அரசியலை முதன்மைப்படுத்தி பிரசாரங்களை முன்னெடுத்து தமிழ் மக்களின் விசனத்தையும் விமர்சனத்தையும் சம்பாதித்ததன் விளைவாகவே தமிழரசுக் கட்சியின் சார்பில் யாழ். மாவட்டத்தில் சிறீதரன் மட்டும் வற்றப் பெற்றதுடன், வன்னி மாவட்டத்தில் ரவிகரன் மட்டும் வெற்றி பெற்றார். 2015ஆம் ஆண்டு பாராளுமன்றத்தேர்தலில் 58,043 வாக்குகளையும் 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் 27,834 வாக்குகளையும் பெற்று வெற்றிபெற்றிருந்த சுமந்திரன் ‘மதுபானசாலை அனுமதி’ என்ற கீழ்த்தரமான பிரசாரத்தை முன்னெடுத்ததால் இந்தத்தேர்தலில் 15,039 வாக்குகளை மட்டும் பெற்று படுதோல்வியடைந்தார். சுமந்திரன் தோல்வியடைந்தது மட்டுமன்றி, அவர் சிறீதரன் மீது முன்வைத்த மதுபானசாலை அனுமதிப்பத்திர குற்றச்சாட்டும் பொய் என்பதும் வெளிப்பட்டது.

அதுமட்டுமன்றி, மதுபானசாலை அனுமதிப்பத்திர பிரசாரத்தில் சுமந்திரனுடன் தீவிரமாக செயற்பட்டவரான இரா.சாணக்கியனின் ஒன்று விட்ட சகோதரனின் மதுபானசாலையில் சிலதினங்களுக்கு முன்னர் மதுபானம் அருந்திய குழுக்களிடையில் ஏற்பட்ட மோதலினால் மதுபானசாலை சேதமாக்கப்பட்டதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. தனது ஒன்று விட்ட சகோதரரே மதுபானசாலை நடத்தும் நிலையில், சாணக்கியன் மதுபானசாலை அனுமதிப்பத்திரங்கள் பற்றி பேச முன்னர் தனது ஒன்று விட்ட சகோதரரின் மதுபானசாலைக்கு எதிராக போராடுவதே நீதியும் தர்மமுமானது.

மதுபானசாலைகள் வடக்கு,கிழக்கில் அதிகரிப்பது ஆரோக்கியமான விடயமல்ல. இளம் சந்ததியினரின் எதிர்காலத்தையே அழித்துவிடும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால், சுமந்திரன் - சாணக்கியன் அணி அதனை தமது சக போட்டியாளரை வீழ்த்தமட்டும் பயன்படுத்த நினைத்ததே தமிழரசுக் கட்சியையும் தமிழ்த் தேசிய அரசியலையும் வடக்கு மாகாணத்தில் வீழ்த்தியுள்ளதுடன், கீழ்த்தரமான அரசியல் முன்மாதிரியாகவும் அமைந்துள்ளது.

> **அர்ச்சுனாவை முதன்மைப்படுத்தி ‘யூரியூப்’களில் காட்சிப்படுத்தப்படும் காணொளிகளுக்கும் அவற்றுக்கு ‘யூரியூப்’பர்கள் போடும் தலைப்புகளையும் பார்த்தாலே மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டு மக்களைக் கவர்ந்து தமது பைகளை நிரப்ப ‘யூரியூப்’பர்கள் கையாளும் தந்திரத்தையும் புரிந்து கொள்ள முடியும்**

இது ஒருபுறமிருக்க ‘டொக்டர் அர்ச்சுனா’ என்ற வடக்கு மற்றும் புலம்பெயர் நாடுகளிலுள்ள வருமானத்தை மட்டும் இலக்காகக்கொண்ட சில ‘யூரியூபர்’ஸினால் ஊதிப்பெருப்பித்துக் காட்டப்படும் ‘காட்சி’ அரசியல் தமிழ்த் தேசிய அரசியலை நாறடித்துக் கொண்டிருக்கின்றது. சில ‘யூரியூபர்’களை நம்பி அர்ச்சுனா எம்.பியும் அர்ச்சுனா எம்.பியை நம்பி சில ‘யூரியூபர்ஸ்’களும் செய்யும் இந்த பிரசாரத்தையும் பணத்தையும் மட்டும் இலக்காகக் கொண்ட அரசியல் மறு புறத்தால் தமிழ்த் தேசிய அரசியலைச் சந்தி சிரிக்க வைத்துள்ளது.

அர்ச்சுனாவை முதன்மைப்படுத்தி ‘யூரியூப்’களில் காட்சிப்படுத்தப்படும் காணொளிகளுக்கும் அவற்றுக்கு ‘யூரியூப்’பர்கள் போடும் தலைப்புகளையும் பார்த்தாலே மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டு மக்களைக் கவர்ந்து தமது பைகளை நிரப்ப ‘யூரியூப்’பர்கள் கையாளும் தந்திரத்தையும் புரிந்து கொள்ள முடியும். ‘யூரியூப்’பர்களே தனது ‘விலாங்குமீன்’அரசியலுக்குப் பொருத்தமானவர்கள் என்பதை நன்குணர்ந்து அவர்களுக்குத் தீனிபோடும் வகையில் அர்ச்சுனாவும் தனது காட்சிகளை நன்கு வடிவமைத்து மக்களைத் தனது நடிப்புக்கு ரசிகர்களாக்கி வருகின்றார். இதில் மக்களும் அவருக்கு ரசிகர்களாகி வருகின்றமை வடக்கில் தமிழ்த் தேசிய அரசியலைக் கீழ் நிலைக்குக் கொண்டு சென்று கொண்டிருக்கின்றது.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு, காணி உரிமைகள். அரசியல் கைதிகள் விடுதலை, காணாமலாக்கப்பட்டோர், இராணுவத்திடம் கையளிக்கப்பட்டோர் பிரச்சினைகளை முன்வைத்து அரசியல் செய்த நிலைமை மாறி தமது கட்சிக்குள்ளேயே பதவி மோகங்களில் குத்து வெட்டுக்கள், குழிபறிப்புக்களில் ஈடுபட்டு கட்சியை உடைத்து பலரை வெளியேற்றி, கட்சி விசுவாசிகளைத் தேர்தலில் தோற்கடிக்க மிகவும் கீழ்த்தரமாக மதுபானசாலை அனுமதிகள் என்ற பிரசாரத்தைக் கையில் எடுத்து ஏனைய சமூகத்தினர் தமிழர்களை அதிலும் வடக்குத் தமிழர்களைக் குடிகாரர்களாக, மதுபான வெறியர்களாகப் பார்த்துச் சிரிக்கும் நிலையை தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணி முன்னெடுத்து ஒருபக்கத்தால் தமிழ்த் தேசிய அரசியலை அழிக்கின்றது.

மறு புறத்தால் தங்கம், மேதகு, தமிழீழம், தமிழன் என்ற வார்த்தைப் பிரயோகங்களை வைத்தும் திட்டமிட்டு சர்ச்சைகளை ஏற்படுத்தியும் அரச கூட்டங்களில் விதண்டாவாதம் செய்து தமிழ் அரச அதிகாரிகளை வம்புக்கிழுத்து அவமானப்படுத்தி, தகுதியற்றவர்களாக, ஊழல் வாதிகளாக, பிரயோசனமற்றவர்களாக ஒருபுறம் காட்டி அதனைக் காட்சிப்படுத்திக்கொண்டு மறுபுறம் காட்சிப்படுத்தாது அரசுக்குத் துதிபாடும் அரசியலை முன்னெடுக்கும் அர்ச்சுனாவின் ‘யூரியூப்’ அரசியலும் தமிழ்த் தேசிய அரசியலை வேறு தடத்துக்குக் கொண்டு சென்று கொண்டிருக்கின்றது.

‘தமிழினத்தை இனி கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்’ என தந்தை செல்வா கூறியிருந்தார். ஒட்டுமொத்தத்தில் ‘தந்தை’ செல்வாவினால் உருவாக்கப்பட்ட தமிழரசு கட்சியும் ‘தந்தை’ விடுதலைப் புலிகளின் தமிழீழ காவல்துறை அதிகாரியாக உயிரைத் தியாகம் செய்தவர் என கூறி தந்தையின் பெயரையும் பயன்படுத்தி அரசியல்வாதியான அர்ச்சுனாவும் தமிழ் தேசிய அரசியலை வேறு தடத்துக்கு கொண்டு செல்வதனால் ‘கடவுளினாலும் இனி தமிழினத்தை காப்பாற்ற முடியாது’ என்ற நிலைமையே தற்போது உருவாகியுள்ளது.

## கடிதங்கள்

### காணிகள் வேண்டும்

அனல் மின்நிலையம் அமைப்பதற்காக கடந்த 2013ஆம் ஆண்டில் சுமார் 2,795 ஏக்கர் விவசாய நிலங்களை இலங்கை அரசு கைப்பற்றியது. இவ்வாறு கைப்பற்றிய காணிகளை மீண்டும் மக்களுக்கு வழங்க வேண்டும் என சம்பூர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் நகரத்திலிருந்து 6.4 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள சம்பூர் கிராமம், 2006ஆம் ஆண்டு யுத்த நிலைமை காரணமாக மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு சொத்துக்களை இழந்து அகதிகளாக இடம்பெயர்ந்தனர்.

2013ஆம் ஆண்டு மீள் குடியேற்றப்பட்ட பின்னர், மக்கள் விவசாயம் மற்றும் கடல்நீர் மீன்பிடி தொழில்களை ஜீவனோபாயமாக மேற்கொண்டனர்.

இந்த கிராமத்தில் வாழும் 950 குடும்பங்களின் விவசாய நிலங்களில் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். 2013ஆம் ஆண்டில் அனல் மின்நிலையம் அமைப்பதற்காக 2,795 ஏக்கர் விவசாய நிலங்களை இலங்கை அரசு மற்றும் மின்சார வாரியம் கைப்பற்றியது. அத்துடன், 2016ஆம் ஆண்டில் மேல் நீதிமன்றம் அனல் மின்நிலைய திட்டத்தை நிராகரித்த பின்னரும், சம்பூர் மக்களுடைய நிலங்கள் மக்களுக்குத் திருப்பி வழங்கப்படவில்லை.

மக்களின் வாழ்வாதாரத்தை மீண்டும் உயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- எப்.முபாரக்

# புத்தாண்டு பிறப்பு

மலந்துள்ள 2025 புத்தாண்டு பிறப்பன்று, நாட்டில் உள்ள பல ஆலயங்கள், தேவாலயங்களில் விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.



கதிர்காமத்தில்...
(படம்: சுமனசிறி குணதிலக்க)



நீர்கொழும்பு புனித செபஸ்தியார் தேவாலயத்தில்...
(படம்:எம்.இஸட்.ஷாஜஹான்)



கொட்டகலை ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயத்தில்...
(படம்: எஸ்.கனேசன்)







குருக்கள்மடம் புனித பிரான்சிஸ் அசிசியார் தேவாலயத்தில் நடைபெற்ற புதுவருட நள்ளிரவு விசேட ஆராதனை.
(படம்: வி.சக்தி)







மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில்...
(படம்:எஸ்.ஆர்.லெம்பேட்)

தாய்லாந்து

பிரிக்ஸ் அமைப்பின் உறுப்பு நாடுகளில்

# தாய்லாந்தும் இணைந்தது

பிரிக்ஸ் அமைப்பின் உறுப்பு நாடுகளில் ஒன்றாக தாய்லாந்து நாடும் இணைந்துள்ளது.

இதன்படி, புதன்கிழமை (1) முதல் அந்நாடு அமைப்பில் உறுப்பினர் அந்தஸ்து பெற்றுள்ளது.

இதுபற்றி தாய்லாந்தின் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

“பிரிக்ஸ் அமைப்பின் 2024ஆம் ஆண்டுக்கான தலைமையையேற்ற ரஷ்யா, கடந்த 2024ஆம் ஆண்டு டிசெம்பர் 28ஆம் திகதி வெளியிட்ட செய்தியில், 2025ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி முதல் பிரிக்ஸ் நாடுகளில் ஒன்றாகத் தாய்லாந்தும் இணையும் என உறுதிப்படுத்தி இருந்தது” என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால், வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா உள்ளிட்ட துறைகளில் பிரிக்ஸ் அமைப்பின் உறுப்பினர் நாடுகளுடனான பொருளாதார உறவுகளை மேம்படுத்த உதவும் வகையில் ஒத்துழைப்பு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும், அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தாய்லாந்து நாட்டுடன் பெலாரஸ், பொலிவியா, இந்தோனேசியா, கஜகஸ்தான், கியூபா, உகாண்டா, மலேசியா மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய 8 நாடுகளும், நேற்று (1) முதல் பிரிக்ஸ் அமைப்பின் உறுப்பினர் நாடுகளாகியுள்ளன.

பிரிக்ஸ் அமைப்பானது நாடுகளுக்கு இடையேயான



கூட்டமைப்பை ஏற்படுத்தும் வகையில், 2006ஆம் ஆண்டு ரஷ்யாவால் நிறுவப்பட்டது. இதில், ரஷ்யா, சீனா, இந்தியா மற்றும் பிரேசில் நாடுகள் உறுப்பினராக இருந்த நிலையில், 2011ஆம் ஆண்டு அந்நாடுகளுடன் தென்னாப்பிரிக்கா நாடும் இணைந்தது.

சுழற்சி முறையில் 2024ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி ரஷ்யா இதன் தலைமையை ஏற்றது. 2024ஆம் ஆண்டு தொடக்கத்தில் எகிப்து, எத்தியோப்பியா, ஈரான் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவை அமைப்பின் உறுப்பினராக அதிகாரப்பூர்வ முறையில் இணைந்தன.



இஸ்ரேல்

ஹமாஸ் அமைப்பின்

## நுக்பா படைப்பிரிவு தளபதி உயிரிழப்பு

ஹமாஸ் அமைப்பின் நுக்பா படைப்பிரிவு தளபதி அப்து ல்-ஹாதி சபா கொல்லப்பட்டதை, இஸ்ரேல் பாதுகாப்பு படை உறுதிப்படுத்தியுள்ளது.

சமீபத்திய டிரோன் தாக்குதலில் அப்துல் ஹாதி கொல்லப்பட்டதாக, இஸ்ரேல் தெரிவித்திருந்தது.

அத்துடன், கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி, கிபுட்ஸ் நிர் ஒஸ்-இல் நடத்தப்பட்ட கொடூர தாக்குதலை அப்துல் ஹாதி சபா வழிநடத்தியதாவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

நுக்பா படைப்பிரிவு தளபதி தெற்கு காசாவில் உள்ள கான் யூனிஸ் பகுதியில் வைத்துக் கொல்லப்பட்டதாக, இஸேஸ்ரல் பாதுகாப்புப் படைகள் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த எக்ஸ் தள பதிவில், “இஸேஸ்ரல் பாதுகாப்பு படையின் உளவுத்துறை மற்றும் ஐ.எஸ்.ஏ. தாக்குதலில் நுக்பா படைப்பிரிவு தளபதியான அப்துல் ஹாதி சபா கொல்லப்பட்டார்” என்று, இஸேஸ்ரல் பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

இஸ்ரேல்

கட்டுமானப் பணிக்கு

## பலத்தீனர்களுக்கு தடை; இந்தியர்களுக்கு வாய்ப்பு

ஹமாஸ்- இஸ்ரேல் மோதலால் மத்திய கிழக்குப் பகுதியில் பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளது. இந்த தாக்குதலின் தொடர்ச் சியாக, இஸேஸ்ரலில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டு வந்த ஆயிரக்கணக்கான பலஸ்தீன தொழிலாளர் களுக்கு அந்நாட்டு அரசு தடைவிதித்தது.

அவர்களுக்குப் பதில் இந்தியாா உள்ளிட்ட நாடுகளிலிருந்து பணியாளர்களைத் தெரிவு செய் யும் நடவடிக்கையில் இஸ்ரேல் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

அதன் விளைவாக தற்போது, இஸ்ரேல் கட்டுமான நடவடிக்கையில் இந்தியர்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு இந்தியாவிலிருந்து இஸ்ரேலுக்கு 16,000 தொழிலா ளர்கள், கட்டுமான பணிக்குச் சென்றுள்ளனர்.

அவர்களுக்கு ஒரு மாதத்துக்கு இலவச உணவு, தங்குமிடம் தவிர 1.5 இலட்சம் ரூபாய் (இந்திய பெறுமதி) சம்பளமாக வழங்கப்படுகிறது.

பாதுகாப்புக்கும் முழு உத்தரவாதம் தரப்பட்டுள் ளது என்று ஏஎஃப்பி செய்தி நிறுவனம் நடத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



உத்தரப்பிரதேசம்

ஹோட்டல் அறையில்

## ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐவர் படுகொலை

உத்தரப்பிரதேச மாநிலம், லக்னோ - நாகா பகுதியில் உள்ள ஒரு தனியார் ஹோட்டல் அறையில், புதன்கிழமை (1) அதிகாலை ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற பொலிஸார், உயிரிழந்தவர்களின் சடலங்களை மீட்டு, பிரேதப் பரிசோதனைக்காக அருகில் உள்ள வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில், அர்ஷத் (வயது 24) என்பவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். வீட்டில் ஏற்பட்ட தகராறு காரணமாக, தனது சொந்த குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரை சந்தேகநபர் கொன்றதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் அலியா (9), அல்ஷியா (19), அக்சா (16) மற்றும் ரஹ்மீன் (18) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த அனைவரும் அர்ஷத்தின் சகோதரிகள் என்றும் ஐந்தாவது நபரான அஸ்மா என்பவர் அர்ஷத்தின் தாயார் என்றும், பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக விரிவான விசாரணை தொடங்கப்பட்ட நிலையில், தடயவியல் குழுக்கள் குற்றம் நடந்த இடத்தில் சாட்சியங்களைச் சேகரிக்க நிறுத்தப்பட்டுள்ளன என்று, பொலிஸார் தெரிவித்துள்ளனர்.






தமிழகம்

## 15 வயது சிறுவனுடன் 22 வயது யுவதி ஓட்டம்

சென்னையில் 15 வயது சிறுவனுடன் மாயமான 22 வயது யுவதியை பொலிஸார் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளனர்.

சென்னை, எம்.ஜி.ஆர். நகர்ப் பகுதியைச் சேர்ந்த 15 வயது சிறுவன், பத்தாம் வகுப்பில் தோல்வி அடைந்ததால், அதே பகுதியைச் சேர்ந்த 22 வயது யுவதி ஒருவரின் வீட்டில் பிரத்தியேக வகுப்புக்குச் சென்று படித்து வந்துள்ளார்.

இந்த நிலையில், கடந்த 16ஆம் திகதி, வெளியில் சென்ற சிறுவன் வெகு நேரமாகியும் வீடு திரும்பவில்லை. இதையடுத்து, சிறுவனின் பெற்றோர் எம்.ஜி.ஆர். நகர் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். விசாரணையில், சிறுவன் தனக்குப் பிரத்தியேக வகுப்பு எடுத்த பெண்ணின் தங்கையான, 22 வயது யுவதி மற்றும் 15 வயதான சிறுவனுடன் பாண்டிச்சேரிக்கு சென்றுள்ளமை தெரியவந்துள்ளது. இதையடுத்து, பாண்டிச்சேரி சென்ற பொலிஸார், அவர்களை அழைத்து வந்துள்ளனர். இதையடுத்து, யுவதி மற்றும் சிறுவன் இருவரையும் போக்சோ சட்டத்தில் கைது செய்துள்ளனர்.

அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில், சிறுவனும் யுவதியும் காதலித்து வந்ததும் அதற்கு ராகுல் என்ற இளைஞன் உதவியதும் தெரியவந்துள்ளது.

நாளை ஐந்தாவது டெஸ்ட்:

# தொடரை சமப்படுத்துமா இந்தியா?



இந்திய, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்தாவது டெஸ்ட் போட்டியானது சிட்னியில் வெள்ளிக்கிழமை (03) அதிகாலை 5 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இந்தியாவும், இரண்டாவது போட்டியை அவுஸ்திரேலியாவும் வென்ற நிலையில் மூன்றாவது போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்திருந்தது. நான்காவது போட்டியில் அவுஸ்திரேலியா வென்ற நிலையில் 2-1 என்ற நிலையில், அவ்வணி தொடரில் முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில் தொடரைச் சமப்படுத்துவதற்கும், சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறுவதற்கான வாய்ப்பைக் கொண்டிருப்பதற்கும் ஐந்தாவது போட்டியில் கட்டாயம் வென்றாக வேண்டிய நிலையில் காணப்படுகின்றது.

இந்தியாவைப் பொறுத்த வரையில் அணித்தலைவர் றோஹித் ஷர்மா இப்போட்டியுடன் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவாரெனக் கூறப்படுகின்ற நிலையில் அவரும், விராட் கோலி, றிஷப் பண்ட் ஆகியோரின் பெறுபேறுகள் பலத்த விமர்சனத்தை எதிர்நோக்கியுள்ளது.

மறுபக்கமாக அவுஸ்திரேலிய அணியில் மிற்செல் மார்ஷின் பெறுபேறுகளும் விமர்சனத்தைச் சந்தித்துள்ள நிலையில அவர் இப்போட்டியில் விளையாடுவாரென எதிர்பார்க்கப்படுவதோடு, உபாதைக்குள்ளான மிற்செல் ஸ்டார்க்கை ஜைஹ றிச்சர்ட்ஸன் பிரதியிடுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

பந்து வீச்சாளர்களின் தரவரிசையில்

## மூன்றாமிடத்துக்கு முன்னேறிய கமின்ஸ்

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான பந்து வீச்சாளர்களின் தரவரிசையில் மூன்றாமிடத்துக்கு அவுஸ்திரேலியாவின் அணித்தலைவர் பற் கமின்ஸ் முன்னேறியுள்ளார்.

இந்தியாவுக்கெதிரான நான்காவது டெஸ்டில் 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றியமையைத் தொடர்ந்தே நான்காமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி மூன்றாமிடத்தையடைந்துள்ளார்.

இதேவேளை, பாகிஸ்தானுக்கெதிரான முதலாவது டெஸ்டில் 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய தென்னாபிரிக்காவின் மார்கோ ஜன்சன், 11ஆம் இடத்திலிருந்து ஆறு இடங்கள் முன்னேறி ஐந்தாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை, 1.ஜஸ்பிரிட் பும்ரா, 2.ஜொாஷ் ஹேசில்வூட், 3.பற் கமின்ஸ், 4.ககிஸோ றபாடா, 5.மார்கோ ஜன்சன், 6.மற் ஹென்றி, 7.நேதன் லையன், 8.பிரபாத் ஜெயசூரிய, 9.நோமன் அலி, 10.இரவீந்திர ஜடேஜா.

இந்தியாவுக்கெதிரான போட்டியில் 90 ஓட்டங்களையும் பெற்ற கமின்ஸ், சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் ஏழாமிடத்திலிருந்து நான்கு இடங்கள் முன்னேறி மூன்றாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை, 1.இரவீந்திர ஜடேஜா, 2.மெஹிடி ஹஸன் மிராஸ், 3.பற் கமின்ஸ், 4.மார்கோ ஜன்சன், 5.ஷகிப் அல் ஹஸன்.

இதேவேளை, அவுஸ்திரேலியாவுக்கெதிரான



இப்போட்டியில் 166 ஓட்டங்களைப் பெற்ற இந்தியாவின் யஷஸ்வி ஜைஸ்வால், துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் ஐந்தாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி நான்காமிடத்தையடைந்துள்ளார்.

இந்நிலையில், தென்னாபிரிக்காவுக்கெதிரான முதலாவது டெஸ்டில் 98 ஓட்டங்களைப் பெற்ற பாகிஸ்தானின் செளட் ஷகீல், ஒன்பதாமிடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி ஆறாமிடத்தையடைந்துள்ளார்.

இதுதவிர இந்தியாவுக்கெதிரான போட்டியில் 153 ஓட்டங்களைப் பெற்ற அவுஸ்திரேலியாவின் ஸ்டீவன் ஸ்மித், 10ஆம் இடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி ஏழாமிடத்தையடைந்துள்ளார்.

## பார்சிலோனா செல்லும் என்குங்கு?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவானது தமது முன்களவீரரான டனி ஒல்மோவை நடப்புப் பருவகாலத்தின் இரண்டாவது பாதிக்கு பதியத் தவறினால் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சியின் முன்களவீரரான கிறிஸ்தோபர் எங்குங்குவை கடனடிப்படையில் கைச்சாத்திட முயலுமெனக் கூறப்படுகிறது.



செல்சியுடன் எதிர்வரும் 2029ஆம் ஆண்டு வரையில் 27 வயதான என்குங்கு ஒப்பந்தத்தைக் கொண்டிருக் கிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

## லிவர்பூலில் தொடரும் சாலா, வான் டிஜிக்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான லிவர்பூலின் அணித்தலைவரான வேர்ஜில் வான் டிஜிக், முன்களவீரரான மொஹமட் சாலா ஆகியோர் கழகத்துடனான ஒப்பந்தத்தை இரண்டு ஆண்டுகளால் நீடிப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

பின்களவீரரான வான் டிஜிக்கினதும், சாலாவினதும் லிவர்பூலுடனான ஒப்பந்தமானது நடப்புப் பருவகாலத்துடன் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 02, ஜனவரி 2025, இல.08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு,இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.